| | வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை<br>இணைந்து வழங்குபவர்கள்<br>பிராந்திய வானிலை மையம் சென்னை - இந்திய வானிலைத் துறை<br>ம. சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும்<br>ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம் | | | | | |
|---|---|---|---|---|---|---|
| மாவட்டம் : | **சிவகங்கை** | காலம் : | **27/12/2023** | முதல் | **31/12/2023** | |
| அறிக்கை எண் : | **103/ 2023** | வெளியீட்டு நாள் : | | **26/12/2023** | | |

### சிவகங்கை மாவட்டத்தின் கடந்த வார வானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 31° - 32° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 21° - 22° செல்சியஸ் ஆகவும் பதிவானது. மேலும் மழை பெறப்பட்டது.

| கடந்தவார வானிலை (21.12.2023 முதல் 25.12.2023) | | | | | | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு –31-12-2023- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 21/12 | 22/12 | 23/12 | 24/12 | 25/12 | தேதி | நாள்-1 27/12 | நாள்-2 28/12 | நாள்-3 29/12 | நாள்-4 30/12 | நாள்-5 31/12 |
| 0.8 | 8.6 | 0.0 | 0.0 | 0.0 | மழை (மி.மீ) | 1 | 2 | 2 | 2 | 3 |
| 25 | 31 | 31 | 32 | 31 | அதிக பட்ச வெப்பநிலை (செல்) | 31 | 30 | 30 | 29 | 29 |
| 23 | 21 | 21 | 22 | 22 | குறைந்த பட்ச வெப்பநிலை (செல்) | 22 | 21 | 21 | 20 | 20 |
| 4 | 5 | 4 | 6 | 6 | மேக மூட்டம் (ஆக்டா) | 5 | 7 | 8 | 8 | 7 |
| 79 | 80 | 85 | 80 | 86 | அதிக மற்றும் குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (சதவீதம்) | 100 | 90 | 90 | 90 | 90 |
| 90 | 67 | 56 | 70 | 65 | | 60 | 70 | 70 | 70 | 70 |
| 7 | 5 | 7 | 9 | 6 | காற்றின் வேகம் (கி.மீ/மணி ) | 16 | 18 | 16 | 20 | 20 |
| வட மேற்கு | கிழக்கு | கிழக்கு | வட கிழக்கு | கிழக்கு | காற்றின் திசை | வட கிழக்கு | வட கிழக்கு | வட கிழக்கு | வட கிழக்கு | வட கிழக்கு |

### குறுஞ்செய்தி :

மாவட்டத்தின் ஒரு சில இடங்களில் டிசம்பர் 28, 29, 30 மற்றும் 31ம் தேதிகளில் லேசான மழைக்கு வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலையானது 29°-31° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலையானது 20°-22° செல்சியஸ் ஆகவும் பதிவாகலாம். வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும். மணிக்கு 16 முதல் 20 கி.மீ வேகத்தில், வடகிழக்கு திசையிலிருந்து காற்று வீசக்கூடும்.

### பொது ஆலோசனை:

மேகமூட்டத்துடன் கூடிய ஈரப்பதமான வானிலை நிலவுவதால் விவசாயிகள் மஞ்சள் நிற **ஒட்டுபொறி** வைத்து சாறு உறிஞ்சும் பூச்சிகளின் **நடமாட்டத்தையும், ஊதா** நிற **ஒட்டுபொறி அட்டை வைத்து அசுவினி மற்றும் இலைத்துளைப்பான் நடமாட்டத்தையும்** கண்காணிக்கவும்.

அடுத்த 5 நாட்களுக்கு மணிக்கு 16 முதல் 20 கி.மீ. வேகத்தில் காற்று வீசும் என எதிர்பார்க்கப்படுவதால் விவசாயிகள் கரும்பு, வாழை, பப்பாளி, கொய்யா, முருங்கை போன்ற பயிர்களுக்கு மண் அனைத்தல், முட்டுகொடுத்தல், விட்டம் கட்டுதல் போன்ற பாதுகாப்பு

பழுதடைந்துள்ள கம்பிகள் மற்றும் தூண்களை கண்டறிந்து சரி செய்யவும். போதுமான முட்டுகளை கொடுக்கவும். பயிர்களுக்கு மருந்து தெளிக்கும் வேலைகளை ஒத்திவைக்கவும்.

**எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்**
**முக்கிய பயிர்கள் : தக்காளி, கத்திரி, கால்நடை**

**தக்காளி:**
பூக்கும் மற்றும் காய்க்கும் பருவத்தில் உள்ள காய்கறி பயிர்களுக்கு நுண்ணூட்டம் உரமிடுதல் நல்ல பயனளிக்கும்.

காய்கறிப் பயிர்களுக்கு நுண்ணூட்டத்தை நீர் பாசனம் வழியாக விடுதல் அல்லது இலை வழியாக தெளிக்கவும்.

**கத்திரி:**
நிலவும் பருவச்சூழ்நிலையில் கத்திரி பயிரில் கண்ணாடி இறக்கைப் பூச்சியின் தாக்குதல் தென்பட வாய்ப்பு உள்ளது.

இவ்வகைப் பூச்சியின் தாக்குதலால் இலைகள் மஞ்சள் நிறமாய் மாறி விடும். சேதமடைந்த இலைகளானது பூச்சியின் உரித்த தோல் மற்றும் கழிவுகளால் மூடியிருப்பதைக் காண முடியும்.

ஒரு டேங்கிர்க்கு 15 மில்லி என்ற அளவில் இமிடாகுளோபிரிடு மருந்தினை தண்ணீரில் கலந்து தெளித்து கட்டுப்படுத்தலாம்.

**கால்நடை:**
நிலவும் தட்பவெப்ப சூழ்நிலையில் தங்களது கால்நடைகளுக்கு காணை நோய் வர வாய்ப்பு உள்ளது. இந்நோயிலிருந்து தங்கள் மாடுகளை காப்பற்ற விவசாயிகள் ஜனவரி மாதத்தில் அருகில் உள்ள கால்நடை மருத்துவரை அணுகி தங்களின் மாடுகளுக்கு கால்காணை வாய்க்காணை (கோமாரி) நோய்க்கான தடுப்பூசி மருந்தினைப் போட்டுக் கொள்ளவும்.